# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**வெற்றிக்கனியை பறிக்க உறுதியேற்ற சேலம் மாவட்ட விரிவடைந்த செயற்குழு**

அன்பார்ந்த தோழர்களே,

BSNLல் நடைபெற உள்ள 7ஆவது சங்க அங்கீகார தேர்தலையொட்டி 05.04.2016 அன்று சேலத்தில் விரிவடைந்த மாவட்ட செயற்குழு சேலம் சுபிக்ஷா மஹாலில் நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் சேலம் மாவட்ட தலைவரும் மாநில உதவி செயலாளருமான தோழர் S.தமிழ்மணி தலைமையில் நடைபெற்ற இந்த சிறப்புக் கூட்ட்த்தில் கலந்துக் கொண்ட அனைவரையும் மாவட்ட உதவி செயலாளார் தோழர் S.ஹரிஹரன் வரவேற்றார்.

இந்த விரிவடைந்த மாவட்ட செயற்குழுவில் BSNL ஊழியர் சங்கத்தின் சேலம் மாவட்ட செயலாளர் தோழர் E.கோபால் சேலம் மாவட்டத்தில் வெற்றி மாங்கனியை பறிப்பதற்கான திட்டங்களை எடுத்துரைத்தார். BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் தனது துவக்க உரையில் தமிழகத்தில் BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற வேண்டியதின் அவசியம் தொடர்பாகவும், ஊழியர் பிரச்சனைகளில் BSNL ஊழியர் சங்கம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் விவரித்தார். SNATTA சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் P.அழகு பாண்டியராஜா தனது சிறப்புரையில் நேரடி நியமன ஊழியர்களுக்கு BSNL ஊழியர் சங்கம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் NFTE சங்கம் எடுத்த எதிர்மறை நிலைபாடுகள் தொடர்பாகவும் சிறப்புடன் எடுத்துரைத்தார். மேலும் அவர் பேசுகையில் தற்போது JTOஆக தான் பதவி உயர்வு பெற்ற போதிலும், தனது பணி ஓய்வு பெறும் ஆண்டான 2040ஆம் ஆண்டு வரை தனது உள்ளத்தில் BSNL ஊழியர் சங்கத்திற்கு ஒரு தனி இடம் உண்டு என்று உணர்ச்சி பொங்க எடுத்துரைத்தார். பின்னர் சிறப்புரை ஆற்றிய BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா, BSNL ஊழியர் சங்கம் BSNLநிறுவனத்தின் புத்தாக்கத்திற்காகவும், BSNL ஊழியர்களின் பிரச்சனைகளுக்காகவும் எடுத்த நடவடிக்கைகளையும், அதில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களையும் விரிவாக எடுத்துரைத்தார். ஏறக்குறைய 300 தோழர்கள் பங்கேற்ற இந்தக் கூட்ட்த்தில் BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் M.பாபு வாழ்த்துரை வழங்கினார். அகில இந்திய BSNL ஊழியர் சங்கம் வெளியிட்ட கையேட்டின் தமிழாக்கத்தை BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா வெளியிட சேலம் மாவட்ட செயலாளர் தோழர் E.கோபால் பெற்றுக் கொண்டார்.

பல்வேறு தோழர்களின் விவாதத்திற்கு பின் மாவட்ட செயலாளர் தோழர் E,கோபால் தொகுப்புரை வழங்கி, இந்த முறை சேலம் மாவட்டத்தில் BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற நமது தோழர்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் எடுத்துக் கூறினார். இனிக்கும் சேலத்து மாங்கனியை BSNL ஊழியர் சங்கத்தின் வெற்றிக்கனியாக்குவோம் என்று சூளுரையை சிரமேற்கொண்டு பங்கேற்ற அனைவருக்கும் மாவட்ட உதவி செயலாளர் தோழர் P.தங்கராஜு நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்.


BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்

BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்

BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
VOTE FOR
S.B.S

BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்

BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்
VOTE FOR
S.B.S

BSNL எம்ப்ளாயீஸ் யூனியன்

